29.08.2019

எஸ்.டி.சி. 01/19 வா.சா. 1 நக்கீரன் , த/பெ. பன்னீர்செல்வம்

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

குறுக்குவிசாரணை

எதிரிகளுடன் கூடிய என்னுடைய தனிப்பட்ட மற்றும் வியாபாரம் சம்மந்தமான நிகழ்வுகளை கூறியுள்ளேன் என்றும் விடுபட்ட நிகழ்வுகள் ஏதும் இல்லை என்றால் சரிதான். என்னுடைய வரவு செலவுகள் அனைத்தும் பச்சியப்பன் டெக்ஸ்டைல்ஸ் என்ற பெயரில் தான் செய்யப்பட்டுள்ளது என்றும் வேறு பெயரில் வரவு செலவுகள் இல்லை என்றால் சரிதான். 20.07.2009 க்கு பிறகு இவ்வழக்கிற்கு முன்பு வரை எனக்கு பணம் வரவேண்டும் என்று எழுத்து மூலமான அறிவிப்பு ஏதும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எங்களுக்கிடையிலான வரவு செலவு சம்மந்தமாக வழக்கிடை காசோலை சம்மந்தமான அறிவிப்பு தவிர வேறு அறிவிப்பு ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கான அறிவிப்பு 09.09.2016 அன்று கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது அர்த்தனாரியையும் சேர்த்து மூன்று பேருக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். 10.09.2016 அன்று ரூ.5 இலட்சம் வரவேண்டும் என்று சொல்லி இன்னொரு அறிவிப்பை கொடுத்திருந்தேன் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம்தான் அந்த அறிவிப்பு என்றால் சரிதான். அது எ.த.சா.ஆ.1 ஆகும். 2008 ம் ஆண்டிலிருந்து எதிரியுடன் வரவு செலவு செய்து வருவது தொடர்பாக காசோலை தவிர வேற எந்த ஏற்பும் எதிரியிடமிருந்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். 2009 ம் ஆண்டிற்கு பின்னர் எதிரிக்கும் எனக்கும் எந்த வித வியாரமும் இல்லை என்றால் சரிதான். வருடாந்திர ஆய்வு கண்க்கில் எதிரிகளுடன் வரவு செலவு வைத்ததாக எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். பு.த.சா.ஆ.1 ஐ 02.07.2016 அன்று வசூலுக்கு சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட தேதியில் வசூலுக்கு சமர்ப்பித்த சங்கதியையோ அதனால் ஏற்பட்ட விழைவு தொடர்பான சங்தியையோ வழக்கறிஞர் அறிவிப்பிலோ புகாரிலோ நிருபண பிரமாண பத்திரிக்கையிலோ முதல் விசாரணைக்காக தாக்கல் செய்யப்பட்ட நிருபண பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நானும் சண்முகம் மற்றும் அருள்ஜோதிலிங்கம் ஆகிய மூவரும் காவல் துறை இணை ஆணையரிடம் புகார் கொடுத்து அம்மாபேட்டை காவல்நிலையத்தில் விசாரிக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகார் எதிரிக்கு எதிராக 20.07.2016 அன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த புகாரிலேயே காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்து திருப்பப்பட்ட விவரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எ.த.சா.ஆ.1 வழக்கறிஞர் அறிவிப்பில் 01.05.2015 அன்று கடனாக கொடுத்த விவரம் ஏதும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகாரிலும் புகார் உடன் தாக்கல் செய்யப்பட்ட நிருபண பிரமாண பத்திரிக்கையிலும் பாப்பால் எக்ஸ்போர்ட் நிறுவனத்தின் அர்த்தனாரி என்பவரும் உரிமையாளராக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்னிட்டு திருத்தம் செய்து தாமு மட்டுமே உரிமையாளர் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய பேரேட்டில் கண்டுள்ள கடன் காலாவாதியானது என்றால் சரியல்ல. பலமுறை எதிரியிடம் நேரிலும் தொலைபேசி மூலமும் குறுஞ்செய்தி அனுப்பியும் பணம் கேட்டேன். அதற்கு எதிரி பணத்தை திருப்பி செலுத்திவிடுவதாக பதில் அளித்துள்ளார். காவல்நிலையத்தில் விசாரணையிலும் எதற்கு வழக்கு தாக்கல் செய்தீர் என கேட்டார். நான் பணம் கொடுத்து விடுகிறேன் என்றும் சொன்னார். மேற்கண்டவாறு நிகழ்வுகள் நடைபெற்றன என்பதை வழக்கறிஞர் அறிவிப்பிலோ நிருபண பிரமாண பத்திரிக்கையிலோ புகாரிலோ முதல் விசாரணை நிருபண பிரமாண பத்திரிக்கையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் ஏதும் உண்மையை பிரதிபலிக்கும் ஆவணங்கள் இல்லை என்றால் சரியல்ல. பு.த.சா.ஆ.1 காசோலையில் தேதி ஒரு மையினாலும் கையெழுத்து வேறு மையினாலும் பச்சியம்மன் டெக்ஸ்டைல்ஸ் என்பது வேறு மையினாலும் எழுதப்பட்டுள்ளது என்றால் எதிரிதான் அதனை கொடுத்தார். பு.த.சா.ஆ.1 காசோலை முதன் முதலில் வசூலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விவரம் மறைக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு எதிராக புகார் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எ.த.சா.ஆ.1 அறிவிப்பு தொடர்பாக ஏதும் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. பாப்பால் எக்ஸ்போர்ட் எனக்கு கொடுக்க வேண்டிய கடன் தொகை ஏதும் இல்லை என்றும் சட்டப்படியான கடன் ஏதும் இல்லை என்றும் எனக்கு செலுத்த வேண்டிய கடன் தொகைக்காக பு.த.சா.ஆ.1 காசோலை கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் உள்ள கையெழுத்து எதிரியினுடையது அல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.